நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தென்னையைத் தாக்கும் புழுவை அழிக்க பச்சை பூஞ்ஞான மருந்து**

First Published : 18 Sep 2010 02:16:41 PM IST

புதுச்சேரி, செப். 17: தென்னையைத் தாக்கும் புழுவை அழிக்க பச்சை பூஞ்ஞான மருந்தை புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் அறிமுகம் செய்ய உள்ளது.

தென்னையை காண்டா மிருக வண்டு தாக்குகிறது. இது வண்டாக வளரும் முன்பாக புழுவாக இருக்கும். அந்தப் புழு பருவத்திலேயே இதை அழிக்கும் வகையில் இந் நிறுவனம் ஒரு மருந்தை கண்டறிந்துள்ளது. அதை விரைவில் வெளியிட உள்ளதாக இந்த நிலையத்தின் பூச்சியியல் நிபுணர் என். விஜயகுமார் கூறினார்.

மேலும் அவர் கூறியது: இந்த மருந்துக்கு மெட்டாரைஸியம் அனியோபிலியா என்று பெயர். சுற்றுச்சூழலைப் பாதிக்காத உயிரி ரக கொல்லி. காண்டா மிருக வண்டாக உருவெடுக்கும் முன்பாக புழுவாக இருக்கும். அந்தப் புழுவின் மீது இப்போது நாங்கள் உருவாக்கியுள்ள மருந்தை தெளித்தால் 5 முதல் 7 நாளில் அந்தப் புழு இறந்துவிடும். இது போன்ற நடவடிக்கையின் காரணமாக காண்டா மிருக வண்டு என்பதே உருவாகாமல் தடுக்க முடியும்.

பெரும்பாலும் காண்டா மிருக வண்டை உருவாக்கும் புழு எரு குழிக்களில், குப்பைகளில்தான் இருக்கும். அதனால் எரு குழிகளில் 1 மீட்டர் நீளம், ஒரு மீட்டர் அகலம், 1 மீட்டர் ஆழம் எடுத்து 1 லிட்டர் தண்ணீரில் 80 கிராம் அளவுக்கு இந்த மருந்தைக் கலந்து தெளித்தால் இந்தப் புழுவை அழிக்க முடியும். இந்த அளவுக்கான மருந்துக்கு 15 தான் செலவாகும் என்றார்.

**ஒரே தென்னை விதையில் இரு மரங்கள்**

First Published : 18 Sep 2010 12:00:00 AM IST



விழுப்புரம் அருகே ஒருகோடி கிராமத்தில் விவசாயி ஒருவரின் பண்ணையில் கண்டெடுக்கப்பட்ட ஒரே தென்னை விதையில் முளைத்த இரு மரங்கள்.

**மழைக்கு நெற்பயிர்கள் நாசம்: கலெக்டர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 18,2010,01:50 IST

பொன்னேரி: தொடர் மழையால் நீரில் மூழ்கி நாசமான பயிர்களை, மாவட்ட கலெக்டர் நேரில் ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு ஆறுதல் கூறினார். திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி மற்றும் அதைச் சுற்றியுள்ள 200க்கும் மேற்பட்ட கிராமங்களில் குறுவை சாகுபடிக்கு பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் நன்கு வளர்ந்திருந்தன. கடந்த மாதம் தொடர் மழை பெய்ததால் மழைநீர் வெளியேற முடியாமல் இவை தண்ணீரில் மூழ்கின. நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியதால் அவற்றில் முளை வந்துவிட்டது. அவற்றை அறுவை செய்ய முடியாமல் நெற்கதிர்கள் வீணானது. ஒரு சில இடங்களில் அறுவடை செய்த நெற்கதிர்கள் மழையில் அடிபட்டன. இவை தரமற்றவையாக கருதப்பட்டு விலைக்கு வாங்க வியாபாரிகள் முன்வரவில்லை. இதனால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 15 முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டது. இதையடுத்து, திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் உத்தரவின்பேரில் வருவாய்த்துறை அதிகாரிகளும், வேளாண்மைத்துறை

அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தனர். இதையடுத்து, மாவட்ட கலெக்டர் ராஜேஷ் நேற்று முன்தினம் மாலை, வருவாய்த்துறை மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகளுடன் அரசூர், விடதண்டலம், மெதூர், காவல்பட்டி உள்ளிட்ட பல கிராமங்களுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது விவசாயிகள் கலெக்டரிடம், எங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும், காப்பீட்டுத் தொகை முழுமையாகவும், உரிய நேரத்தில் கிடைக்கவும் வழி ஏற்படுத்த வேண்டும். மழைநீர் தேங்காமல் இருக்க வடிகால்வாய் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வேதனையுடன் தெரிவித்தனர். அதற்கு கலெக்டர், உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுபோன்று இயற்கை பாதிப்புகளில் நெற்பயிர்கள் வீணாகாமல் இருக்க, விவசாயிகளுடன் கலந்து ஆலோசித்து முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க உள்ளோம். தற்போது 10,000 ஏக்கர் விளை நிலங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதில் விடுபட்ட விவசாயிகளின் பெயர்களும் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

**திட்டமிட்டே சாகுபடி விவரங்களை சிட்டா அடங்கலில் பதிவு செய்வதில்லை: விவசாயிகள் புகார்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 18,2010,02:06 IST

கடலூர் : விளை நிலங்களை வேறு பயன் பாட்டிற்கு மாற்றுவதற்கு திட்டமிட்டே பயிர் சாகுபடி விவரங்களை அடங்கலில் பதிவு செய்யாமல் உள்ளனர் என விவசாயிகள் புகார் தெரிவித்தனர். கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம், மாவட்ட வளர்ச்சி மன்ற கூட அரங்கில் நடந் தது. கலெக்டர் சீத்தாராமன் தலைமை தாங்கினார். டி.ஆர்.ஓ., நடராஜன், வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) மணி முன்னிலை வகித்தனர். வரதன்: அரசு வழங்கும் வேப்பம் புண்ணாக்கு தரமில்லாமல் உள்ளது. என கூறியபடி மாதிரியை கலெக்டரிடம் காண்பித்தார்.
உடன் கலெக்டர் அதனைப் பெற்று ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பி ஆய்வு செய்ய உத்தரவிட்டார். தொடர்ந்து பேசிய வரதன், மோனோ அமோனியம் பாஸ்பேட் (எம்.ஏ.பி.,12:61:0) என்ற உரம் தோட்டக்கலைத் துறையினர் 2,448.75 ரூபாய்க்கு வழங்குகின்றனர். தனியார் வியாபாரிகள் கடையில் 1,900 ரூபாய்க்கு விற்பனை செய் கின்றனர்.
ரவீந்திரன்: சிதம்பரம் டெல்டா பாசன பகுதியில் பானசத்திற்கு தண் ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. ஆனால் புவனகிரி, பரங்கிப் பேட்டை பகுதிகளில் விவசாயம் செய்வதற்கு தண்ணீர் திறந்து விடவில்லை. தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டம் குறித்து தொழிலா ளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு பாதிப் பில்லாமல், வேலையை தேர்வு செய்வது குறித்து அவசியம் கிராம சபை கூட்டத்ததைக் கூட்டி முடிவு செய்ய வேண்டும்.

பாசிமுத்தான் ஓடை பாசன விவசாயி ரவீந்திரன்: விளை நிலங்களை வேறு பயன்பாட்டிற்கு மாற்றுவதற்கு திட்டமிட்டே பயிர் சாகுபடி விவரங்களை அடங்கலில் வி.ஏ.ஓ., உதவியுடன் பதிவு செய்யாமல் உள் ளனர். மூன்று ஆண்டுகளுக்கு பயிர் செய்யாத நிலங்களை பிளாட் போட்டு விற்பனை செய்வது உள் ளிட்ட மாற்று பயன்பாட்டிற்கு மாற் றிக்கொள்ளலாம் என்பதால் இது போன்று நடக்கிறது. இவ்வாறு விவாதம் நடந்தது.

**திராட்சை தோட்டங்களுக்கு பாதிப்பு: மூடப்பட்ட குவாரி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 18,2010,21:42 IST

கம்பம் : காமயகவுண்டன்பட்டியில் உள்ள கிரஷர்களால் திராட்சை தோட்டங்கள் பாதிப்புக்குள்ளானதையடுத்து கிரஷரை மூட கலெக்டர் முத்துவீரன் உத்தரவிட்டுள்ளார். காமயகவுண்டன்பட்டியில் ஆறு கல் குவாரிகளும், 5 கிரஷர்களும் செயல்பட்டு வருகிறது. அதில் இரண்டு கல் குவாரிகள் மகளிர் சுய உதவிக்குழுவினரால் நடத்தப்படுகிறது. கிரஷர்களால், அருகில் உள்ள விவசாய நிலங்கள், குறிப்பாக திராட்சை மற்றும் தென்னை மரங்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கலெக்டரிடம் புகார் தெரிவித்தனர். திராட்சை தோட் டங்கள் மீது கிரஷரில் இருந்து வெளியேறும் தூசிகள் பரவி, பழங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக புகார் கூறப்பட்டது.
இதையடுத்து கலெக்டர் முத்துவீரன் தலைமையில், மாசுகட்டுப்பாட்டு அதிகாரி ஜெயலட்சுமி, கனிம வள உதவி இயக்குநர், உத்தமபாளையம் ஆர்.டி.ஓ., மோகனதாஸ், தாசில்தார் மனோகரன் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர், கல்குவாரி, கிரஷர் பகுதிகளை ஆய்வு செய்தனர். உடனடியாக பாதிப்பு ஏற்படுத்திய கிரஷரை மூட உத்தரவிட்டனர். மேலும் எஞ்சியுள்ள நான்கு கிரஷர்களையும் ஆய்வு நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்கவும் கலெக்டர் முத்துவீரன் உத்தரவிட்டார்.

**பட்டு வளர்ச்சி பணி: இயக்குனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 18,2010,03:03 IST

தர்மபுரி: தர்மபுரி மற்றும் பென்னாகரம் பகுதியில் சேலம் பட்டு வளர்ச்சி துறை இயக்குனர் ஆய்வு செய்தார்.சேலம் பட்டு வளர்ச்சி துறை இயக்குனர் பிரபாகரன் தர்மபுரி, பென்னாகரம் உதவி இயக்குனர் அலுவலக கட்டுப்பாட்டில் உள்ள பட்டு வளர்ச்சி பணிகளை ஆய்வு செய்தார்.

தனியார் பட்டு நூற்பு நிலையங்களின் செயல்பாடுகள் குறித்தும், தரமான பட்டு நூல் உற்பத்தி செய்யவும், காஞ்சிபுரம் அண்ணா பட்டு பரிமாற்றத்தில் விற்பனை செய்து நல்ல பயன் அடைய வேண்டும் என கேட்டு கொண்டார். பட்டு புழு வர்ப்பு செய்யும் விவசாயிகளின் மல்பெரி தோட்டங்கள் மற்றும் புழு வளர்ப்பு பண்ணைகளை ஆய்வு செய்து தரமான பட்டுகூடுகளை உற்பத்தி செய்ய வேண்டும் என கேட்டு கொண்டார்.

சில பட்டு விவசாயிகளின் தோட்டங்களில் பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதல் காணப்படுவதை சுட்டிக்காட்டி பொரி வண்டு, ஊன் ஊண்ணிகள் கொண்டு கட்டுப்படுத்த அறிவுரைணு வழங்கினார். அரசு பட்டு முட்டை வித்தகம் மற்றும் அரசு பட்டுப் பண்ணைகளை ஆய்வு செய்து உரிய அறிவுரை, ஆலோசனைகளை வழங்கினார். மண்டல இணை இயக்குனர் சொக்கலிங்கம், உதவி இயக்குனர் ஜெயவேல் உட்பட பலர் ஆய்வின் போது கலந்து கொண்டனர்.

**உணவு உற்பத்தியில் ஊராட்சி தலைவருக்கும் பங்கு : வேளாண் பல்கலை துணைவேந்தர் பேச்சு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,21:47 IST

கோவை : ""கிராம வளர்ச்சியில் விவசாயம் முக்கிய அங்கம் என்பதால், நாட்டின் உணவு உற்பத்தியை பெருக்க ஊராட்சி மன்ற தலைவர்கள் முழுமையாக ஈடுபட வேண்டும்," என, வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார். ஊராட்சி மன்றங்களின் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் குறித்த இரண்டு நாள் கலந்துரையாடல், கோவை வேளாண் பல்கலையில் நடந்தது.

நிகழ்ச்சியில், பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது: சுதந்திரம் பெற்றபோது, நாட்டின் மக்கள் தொகை 30 கோடி. உணவு உற்பத்தி 5.3 கோடி டன். மக்கள் தொகைக்கு உணவு பற்றாக்குறை இருந்தது. உணவை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருந்தோம். பின் ஐந்தாண்டு திட்டங்கள் துவக்கப்பட்டன.

1950 முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களும் தொழில் வளர்ச்சிக்கும் தொழிற்சாலை வளர்ச்சிக்கும் அதிக முக்கியத்துவம் தரும் வகையில் வடிவமைக்கப்பட்டன. எதிர்பார்த்த வளர்ச்சி ஏற்படவில்லை. ஏனென்றால் 70 சதவீதத்துக்கு அதிகமானோர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர்.மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் விவசாயத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

தற்போது மக்கள் தொகை 113 கோடி. உணவு உற்பத்தி 23.4 கோடி டன். உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளோம். 2050ல் இந்தியாவின் மக்கள் தொகை சீனாவை தாண்டி விடும் அபாயம் உள்ளது. நிலப்பரப்பும் குறைந்து வருகிறது. எனவே, அந்த காலகட்டத்துக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

வேளாண் பல்கலையில், நூற்றுக்கணக்கான புதிய பயிர் ரகங்களையும்பண்ணைக் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் வெளியிட்டுள்ளது. சமீப காலத்தில் செம்மை நெல் சாகுபடி, துல்லிய பண்ணையம், செம்மை கரும்பு சாகுபடி, சொட்டு நீர் பாசனம், சொட்டு நீர் பாசனம் வாயிலாக உரமிடுதல், பண்ணை இயந்திரமயமாக்குதல் போன்ற புதிய முறைகள் விவசாயிகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 80 லட்சம் விவசாயிகள் உள்ளனர். அனைவரையும் வேளாண் விஞ்ஞானிகள் சந்திக்க முடியாது. எனவே, உணவு உற்பத்தியை பெருக்க ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. விவசாயம் கிராம வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கம். மக்கள் பிரதிநிதிகள் விவசாய திட்டமிடுதலிலும் வளர்ச்சி பணிகளிலும் முழுமையாக ஈடுபடுவது அவசியம். இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.

காந்தி கிராம பல்கலையின் அரசியல், அறிவியல் மற்றும் மேம்பாட்டு நிர்வாக துறை பேராசியர் பழனிதுரை பேசுகையில், "" ஐந்து ஆண்டுகளில் கிராம பஞ்சாயத்து முன்னேற்றத்துக்கு 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செயயப்பட்டுள்ளது. அதல் 309 திட்டங்கள் அடங்கும். 58 வளர்ச்சி துறைகள் கிராம வளர்ச்சிக்காக செயல்பட்டு வருகின்றன.

ஊராட்சி மன்றத் தலைவர்கள் வளர்ச்சி திட்டங்களையும் துறைகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கிராம அளவில் 60 சதவீத மக்கள் விவாயத்தை நம்பி வாழ்கின்றனர். விவசாய திட்டமிடுதலில் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அணுகுமுறை தொழில்ரீதியாக இருக்க வேண்டும்,'' என்றார்.

வேளாண் ஊரக மேம்பாட்டு ஆய்வு மைய இயக்குனர் அஜ்ஜன், பேராசிரியர் வெங்கட்ராமன், திட்டமிடுதல் மற்றும் கண்காñணிப்பு இயக்கக இயக்குனர் சிவசுப்ரமணியன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**தேங்காய் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 17,2010,21:46 IST

சோமனூர் : வரத்து குறைவால், தேங் காய் விலை உயர்ந்துள்ளது.

சோமனூர், சூலூர் சுற்றுப்பகுதியில் ஒரு மாதமாக தேங்காய் விளைச்சல் குறைந்துள்ளது. விவசாயிகள் பலர் தோப்புகளை குத்தகைக்கு விட்டுள்ளனர். தற்போது கொப்பரைக்கு கொள்முதல் விலை அதிகரித்துள்ளது. இவற்றை ஏலம் எடுத்த வியாபாரிகள், கொப்பரைக்கு தேங்காயைப் பயன்படுத்த துவங்கியுள்ளனர். எனவே, பெருமளவு தேங்காய் சந்தைக்கு விற்பனைக்கு வருவது குறைந்துள்ளது. தேங்காய் விளைச்சலும் குறைவாக உள்ளதால் வரத்து குறைவாக உள்ளது.தேங்காய் விலை சற்று அதிகரித்துள்ளது.

சிறிய சைஸ் தேங்காய் நான்கு ரூபாய், மத்திய தர தேங்காய் ஐந்து ரூபாய், சற்று பெரிய அளவு தேங்காய் ஆறு ரூபாய் அளவில் மொத்த விலைக்கு விற்பனையாகிறது. கடைகளில் விற்பனை செய்ய தேங்காய் வாங்க வாரசந்தை மற்றும் ஏல மையத்துக்கு வந்த வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்தனர். ஏல மையம் மற்றும் சந்தையில் தேங்காய் விலை உயர்ந்துள்ளதால், சில்லறை விற்பனையிலும் அதிகரிக்கும்.

**விவசாயிகளுக்கு கூடுதல் செலவினம் ஏற்படுத்தும் வேளாண் அதிகாரிகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 18,2010,22:26 IST

சிவகாசி : சிவகாசி அருகே விவசாயிகள் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட லாரி விருதுநகரில் பயன்படுத்தப்படுவதால் விவசாயிகள் கூடுதலாக செலவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

சிவகாசி தாலுகா கொத்தனேரியில், அர்ஜூனாநதி நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் 2008ல், 20 லட்ச ரூபாயில் சேமிப்பு கிடங்கு, உலர் களம் கட்டப்பட்டது. இங்கு 20,000 மூடை விளை பொருட்களை சேமித்து வைக்கும் வசதி உள்ளது. மாதம் ஒரு மூடைக்கு ஒரு ரூபாய் வாடகை வசூலிக்கப்படுவதால் புதுக்கோட்டை, சித்தமநாயக்கன்பட்டி, நடையனேரி, குமிழங்குளம் உள்ளிட்ட 15 கி.மீ., சுற்றளவில் உள்ள விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

விளைபொருளை ஈடு வைத்து கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்று, கூடுதல் விலை கிடைக்கும் போது விற்று பயன்பெறுகின்றனர்.

இந்நிலையில் கவுண்டம்பட்டி - கொத்தனேரி ரோட்டின் இடையே உள்ள இந்த கிடங்கிற்கு செல்ல சாலை வசதியே இல்லை. இருப்பினும் இந்த கிடங்கிற்கு விளை பொருட்களை கொண்டு செல்வதற்காக விவசாயிகளுக்காக குறைந்த வாடகையில் மினி லாரி வழங்கப்பட்டது. இது தற்போது விருதுநகர் வேளாண் விற்பனை மையத்தினரால் பயன்படுத்தப்படுகிறது.

இதனால் கிடங்கிற்கு விளை பொருட்களை தனியார் வாகனங்களில் கொண்டு செல்ல மூடைக்கு 20 முதல் 50 வரை ரூபாய் வரை கூடுதல் செலவு செய்ய வேண்டியுள்ளது. எனவே, மினி லாரியை விவசாயிகள் பயன்படுத்தும் வகையிலும், இணைப்பு ரோடு வசதி செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினத் தந்தி

## ஆகஸ்டு மாதம் வரையிலுமாக 20 லட்சம் டன் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

நடப்பு எண்ணெய் பருவத்தில் (அக்டோபர் செப்டம்பர்), ஆகஸ்டு மாதம் வரையிலான காலத்தில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 20.50 லட்சம் டன்னாக உள்ளது. இது, சென்ற ஆண்டு இதே பருவத்தில் 30.40 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி 32.51 சதவீதம் குறைந்துள்ளது.

நடப்பு செப்டம்பர் மாதத்தில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 4 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து, நடப்பு முழு எண்ணெய் பருவத்தில், நாட்டின் ஒட்டுமொத்த சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 24.50 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கால்நடை தீவனம்

சோயா புண்ணாக்கு பல வெளிநாடுகளில் கால்நடை தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. நடப்பு செப்டம்பர் மாதத்தில், இதன் ஏற்றுமதி அதிகரிக்கும் நிலையில், சென்ற ஆண்டுடன் ஒப்பிடும்போது இதன் சரிவு ஓரளவுக்கு தடுத்து நிறுத்தப்படும் என இந்திய சோயாபீன் பதப்படுத்துவோர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ராஜேஷ் அகர்வால் தெரிவித்தார்.

### மஞ்சூர் பகுதியில்

# அறுவடைக்கு தயார் நிலையில் காபி காய்கள்

## விவசாயிகள் மகிழ்ச்சி

மஞ்சூர், செப்.20–

மஞ்சூர் பகுதிகளில் உள்ள காபி செடிகளில் உள்ள காபி காய்கள் அறுவடைக்கு தயாராகி வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### 2 பருவங்கள்

மஞ்சூர் சுற்று வட்டார பகுதிகளான மட்டகண்டி, தூனேரி, ஓணிகண்டி, குந்தா, முக்கிமலை, பெங்கால்மட்டம், மெரிலேண்ட், கோத்திபென், கோக்கலாடா, சாம்ராஜ், கைக்காட்டி ஆகிய பகுதிகளில் சுமார் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தேயிலை தோட்டங்கள் உள்ளன.


இந்த தேயிலை தோட்டங்களில் ஊடு பயிராக காபி செடிகளை விவசாயிகள் பயிரிட்டு உள்ளனர். இந்தகாபி செடிகளில் வருடந் தோறும் ஏப்ரல், மே மற்றும் அக்டோபர், நவம்பர் ஆகிய 2 பருவங்களில் காபி காய்கள் அறுவடை செய்யப்படுகிறது.

### காய்த்து குலுங்குகிறது

தற்சமயம் இந்த பகுதிகளில் உள்ள அனைத்து காபி செடிகளிலும் பெருமளவில் காபி காய்கள் காய்த்து உள்ளது. இந்த காபி காய்கள் இன்னும் சில நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும். தற்போது மார்க்கெட்டில் காபிக்கு நல்ல விலை உள்ளது.

இந்த காபி காய்களை விவசாயிகள் பறித்து முதலில் காய்களில் உள்ள தோலை நீக்குகின்றனர். பின்னர் காபி கொட்டைகளை வெயிலில் காய வைக்கின்றனர். அதனை தொடர்ந்து காபி கொட்டைகள் எந்திரங்களில் அரைக்கப்பட்டு காபி பொடி தயாரிக்கப்படுகிறது.

மேலும் பெரிய வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர். காபி காய்கள் மூலம் இந்த ஆண்டு விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.



மஞ்சூர் பகுதியில் உள்ள ஒரு தேயிலை தோட்டத்தில் காபி காய்கள் காய்த்து குலுங்குவதை படத்தில் காணலாம்.

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில்

# 2-வது சீசனை முன்னிட்டு மலர் மாடத்தில் பூச்செடிகள் அடுக்கும் பணி தீவிரம்

## மலர் கண்காட்சி நடத்த ஏற்பாடு

ஊட்டி, செப்.18-

2-வது சீசனை முன்னிட்டு ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் மாடத்தில் செடிகள் அடுக்கி வைக்கும் பணி தொடங்கி உள்ளது. மேலும் மலர் கண்காட்சி நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### 2-வது சீசன்

மலைகளின் அரசி என்றழைக்கப்படும் நீலகிரி மாவட்டத்தில் உலக சுற்றுலா தலமாக விளங்கும் ஊட்டியில் ஏப்ரல், மே மாதங்கள் கோடை சீசன் காலங்கள் ஆகும். அப்போது சமவெளி பிரதேசங்களில் கடும் வெப்பம் காரணமாக ஊட்டியில் நிலவும் குளு, குளு சீசனை அனுபவிக்க ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

இந்த சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க மே மாதம் மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி உள்பட பல்வேறு விழாக்கள் ஊட்டியில் நடைபெறும். ஆனால் 2-வது சீசன் காலமான செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் விழாக்கள் எதுவும் நடத்தப்படுவது இல்லை. ஆனால் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மலர் செடிகள் தாவரவியல் பூங்கா உள்பட பல்வேறு இடங்களில் பூத்து குலுங்கும்.

### அடுக்கும் பணி

இந்த ஆண்டு 2-வது சீசனை முன்னிட்டு மலர் கண்காட்சி நடத்த தோட்டக்கலை துறை அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளதாக கூறப்படுகிறது. அதன்படி ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் செப்டம்பர் மாதம் பூக்கும் வகையில் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு மலர் செடிகள் நடவு செய்யப்பட்டது. சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு இருந்தன.

தற்போது இந்த மலர் செடிகள் பூத்து குலுங்க தொடங்கி உள்ளன. இதனால் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் ஆரவாரம் இன்றி மலர் கண்காட்சி நடைபெற உள்ளது.

இதற்காக ஊட்டி தோட்டக்கலை துறை இணை இயக்குனர் தேவராஜ் மேற்பார்வையில் தோட்டக்கலை உதவி இயக்குனர் பிரகாசம் மற்றும் பூங்கா ஊழியர்கள் மலர் செடி தொட்டிகளை மலர் மாடத்தில் அடுக்கும் பணியில் நேற்று ஈடுபட்டனர்.

### மலர் கண்காட்சி

இது குறித்து அரசு தாவரவியல் பூங்கா உதவி இயக்குனர் பிரகாசம் நிருபர்களிடம் கூறியதாவது:-

இந்த ஆண்டு முதல்முறையாக 2-வது சீசனுக்கு மலர் கண்காட்சி நடத்த தோட்டக்கலை துறை அதிகாரிகள் எடுத்தமுயற்சிஎடுத்துள்ளனர். இதற்காக 7 ஆயிரத்து 500 மலர் தொட்டிகளில் மலர்கள் நடவு செய்யப்பட்டன. இவைகள் தற்போது பூத்து குலுங்குகின்றன.

சால்வியா, பிரன்ச் மேரிகோல்டு, பேன்சி, லேடிஸ் பேஸ், கேண்டிபாட், டேலியா, அஜிரோட்டம் போன்ற மலர் செடிகள் பூங்கா மலர் மாடத்தில் அடுக்கி வைக்கும் பணி நேற்று தொடங்கியது. ஆரவாரம் இல்லாமல் பூங்காவில் 2-வது சீசன் மலர் கண்காட்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தமலர்களை அக்டோபர் மாதம் கடைசி வரை மலர் மாடங்களில் கண்டுகளிக்கலாம். மேலும் பூங்கா புல் தரைகளில் வளர்க்கப்படும் பெக்கோனஸ் மலர்களும் பூத்து குலுங்குகின்றன. இந்த ஆண்டு மழை இருந்தாலும் மலர் செடிகள் உற்பத்திக்கு பாதிப்பு ஏற்படவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

